**செய்தி வெளியீடு எண்: 386** **நாள்: 18.06.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு மின்னாளுமை முகமை வாயிலாக மின் மாவட்ட திட்டத்தின் கீழ் இணையத்தின் உதவியுடன் பல்வேறு அரசு சேவைகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பள்ளி தேர்வு முடிவுகளைத் தொடர்ந்து மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை உள்ள காலக்கட்டத்தில் இந்த சேவைகளை அதிக அளவில் பெறுவதற்காக மக்கள் இ–சேவை மையத்தை நாடுகின்றனர். அதிக அளவிலான விண்ணப்பங்கள் இந்த காலகட்டத்தில் வருவதனால் வலையதளத்தின் செயல்பாட்டுத்திறன் குறைகிறது. வழக்கமாக நாள் ஒன்றுக்கு முப்பதாயிரம் (30,000) முதல் நாற்பதாயிரம் (40,000) வரை விண்ணப்பங்கள் பெறப்படும். ஆனால் கடந்த ஜீன் 13 ஆம் தேதியன்று மட்டும் தொன்னூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று ஐந்து (92,805) விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இது வழக்கத்தை விட இருமடங்கு அதிகமாகும். தமிழ்நாடு மின்னாளுமை முகமை, அனைத்து சேவைகளையும், பரிவர்த்தனைகளையும் கண்காணித்து வருகிறது. ஏதேனும் குறைபாடுகள் ஏற்படுமாயின் அதற்கு ஏற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் நாளது தேதி வரை மின் மாவட்ட திட்டத்தில் மொத்தம் 41,39,096 பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**